பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக transparent ஆக நியமனம் செய்திருக்கிறோம். தேர்தலுக்கு முன்னர்கூட M.B.B.S. படித்த 1,000 மருத்துவர்களுக்கு appointment order கொடுத்தோம். வரும் 5 ஆம் தேதி M.B.B.S. படித்த மருத்துவர்களுக்கு appointment order கொடுத்து, தொடர்ந்து நியமனம் செய்ய இருக்கிறோம். செவிலியரை நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். மருத்துவப் பணியாளர்களை நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். நோயாளிகளின் எண்ணிக்கை 3, 4 இலட்சம். ஒரு நாளைக்கு மொத்தம் 5–லிருந்து 6 இலட்சம் புறநோயாளிகள் தமிழகத்தில் மருத்துவமனைகளுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில்தான் சிறந்த மருத்துவ சேவை இருக்கிறது; இங்கு வந்தால்தான் உயிர் பிழைக்க முடியும் என்று நம்பி பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலிருந்து 30 சதவிகிதம் பேர் சிகிச்சைக்காக இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் எந்தக் கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சேவையும் தரமாக இருக்கிறது. மக்களிடம் எதிர்பார்ப்பும் இருக்கிறது. நீங்கள் சொல்கிற செய்யூர் போன்ற பகுதிகளில் கூடுதல் வசதிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தங்கள் பகுதி மருத்துவமனைக்கு என்ன தேவையோ அதை நிச்சயமாக ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

குளிர்பதனக் கிடங்கு

***35027—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 2]

(அ) சேலம் தெற்கு தொகுதியில் காய்கறி மற்றும் மலர்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் இதய தெய்வமாக வீற்றிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர் பாதம் வணங்குகிறேன். தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்தி, விவசாயிகளின் காவலனாக, குடிமராமத்து நாயகனாக விளங்கி வரும் தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருடைய பொற்கால ஆட்சிக்கு உற்ற துணையாக இருந்து செயல்படும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் சபையின் நடுவராக, நாயகனாக விளங்குகின்ற தங்களுக்கும் என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் தெற்கு தொகுதியில் காய்கறி மற்றும் மலர்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான்; மக்களுக்காகவே நான்" என்று தாய் தமிழ்நாட்டிற்காகவும், தமிழக மக்களுக்காகவும் அல்லும், பகலும் அயராது உழைத்திட்ட அற்புதத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். உத்தமத் தாயின் உன்னத பிள்ளைகளாய் அம்மா வழி தொடர்ந்து அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற ஒப்பாரும், மிக்காருமில்லா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமை பொருந்திய அண்ணனார் எடப்பாடியார் அவர்களையும் அவருக்கு உறுதுணையாய் விளங்கும் ஒப்புமை*

இல்லா மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணனார் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும், வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தெற்கு தொகுதி, மாநகர பகுதியில் அமைந்திருந்தாலும், கிராமங்களை ஒட்டியுள்ள பகுதியாகும். இதனைச் சுற்றியுள்ள அயோத்தியாபட்டணம், மல்லூர், பனமரத்துப்பட்டி, மாமாங்கம், கே.ஆர். தோப்பூர் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் விளைகின்ற காய்கறிகளையும், மலர்களையும், பழங்களையும் விற்பதற்காக சேலம் மாநகரில் உள்ள வ.உ.சி. மார்க்கெட், தாதகாப்பட்டி, கருங்கல்பட்டி, காமராசர் நகர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள மார்க்கெட்டிற்குதான் கொண்டு வருகின்றனர். வாரந்தோறும் செவ்வாய்க்கிழமையன்று வாரச் சந்தை நடைபெற்று வருகின்றது. தொகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் சிறு, சிறு காய்கறி அங்காடிகளும் உள்ளன. முகூர்த்த நாட்கள் மற்றும் விழாக் காலங்களில் மலர்கள் உள்ளிட்ட விவசாயப் பொருட்களின் வரத்தும் விற்பனையும் இங்கே மிக அதிக அளவில் நடைபெறுகின்றது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இங்கேயெல்லாம் விவசாயிகள் கொண்டு வந்து விற்கின்ற பொருட்கள் போக, மீதமுள்ள காய்கறிகளையும் பழங்களையும் பூக்களையும் பாதுகாத்து வைத்து, மறுநாள் விற்பதற்கு வசதியாக குளிர்பதனக் கிடங்கு ஒன்றை தொகுதியில் உள்ள கிச்சிப்பாளையம் அல்லது மணியனூர் பகுதியில் அமைத்துத் தந்து, விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசு ஆவன செய்ய வேண்டும் என்று மீண்டும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வெங்காயம் 435 ஹெக்டேரிலும், கத்தரி 1,827 ஹெக்டேரிலும், வெண்டை 2,287 ஹெக்டேரிலும், தக்காளி 3,200 ஹெக்டேரிலும், பாகற்காய் 252 ஹெக்டேரிலும், கீரை வகைகள் 503 ஹெக்டேரிலும் ஆக மொத்தம் 8,504 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. காய்கறி உற்பத்தியைப் பொறுத்தளவில் வெங்காயம் 5,435 மெட்ரிக் டன்,

2019 ஜூலை 2]

கத்தரி 36,093 மெ.டன், வெண்டை 30,187 மெ.டன், தக்காளி 70,079 மெ.டன், பாகற்காய் 3,650 மெ.டன், கீரை வகைகள் 3,825 மெ.டன், ஆக மொத்தம் 1,50,269 மெ.டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த காய்கறி உற்பத்தியில் விவசாயிகளின் சுய தேவை நீங்கலாக விற்பனை உபரி 1,47,261 மெ.டன் ஆகும். இது சேலம் மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் மலர்கள் மொத்தம் 3,247 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும். 56,380 மெ.டன் மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் விவசாயிகளின் சுய தேவை நீங்கலாக விற்பனை உபரி 55,252 மெ.டன் ஆகும். இது சேலம் மாவட்டம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இப்பகுதிகளில் பயிரிடப்படும் காய்கறிகள் மற்றும் மலர்கள் சேலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் 11 உழவர் சந்தைகளிலும் உள்ளூர் சந்தை மற்றும் வாரச் சந்தையிலும், வ.உ.சி. சந்தையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் விளையும் காய்கறிகளையும் மலர்களையும் இருப்பு வைத்து விற்பனை செய்திட மேச்சேரி, ஆத்தூர் கெங்கவல்லி, உத்தமசோழபுரம் ஆகிய இடங்களில் தலா ஒன்றும், வாழப்பாடியில் இரண்டும், ஆக மொத்தம் 6 குளிர்பதனக் கிடங்குகள் 25 மெ.டன் கொள்ளளவிலும் மேச்சேரியில் 100 மெ.டன் கொள்ளளவிலும் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மேலும், சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம், ஆத்தூர், அம்மாப்பேட்டை, தளவாய்பட்டி மற்றும் அஸ்தம்பட்டி ஆகிய உழவர் சந்தைகளில் தலா 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம், சேலம் மாவட்டத்தில் ஒரே சமயத்தில் 260 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் மலர்களைக் குளிர்பதனக் கிடங்குகளில் இருப்பு வைக்க வசதியுள்ளது. இதில் சேலம் தெற்கு தொகுதியில் உள்ள அம்மாப்பேட்டை குளிர்பதனக் கிடங்கும் அடங்கும். எனவே, இப்பகுதி விவசாயிகள் மாவட்டத்திலுள்ள குளிர்பதனக் கிடங்குகளைத் தேவைக்கேற்ப*

பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளிர்பதனக் கிடங்கு அமைக்கக் கோரும் கிச்சிப்பாளையம் அல்லது மணியனூர் பகுதியில் தேவை ஏற்படின், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு, சொல்லளவில் இல்லாமல் செயல் அளவில் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணனார் திரு. எடப்பாடியார் அவர்களின் சீரிய தலைமையில் விவசாயிகளுக்கான குடிமராமத்துப் பணி, பயிர்க் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பயன்களை வழங்கியதன் விளைவாக இத்துறைக்கான Krishi Karman என்ற உயரிய விருதினைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு 4 ஆண்டுகளாகப் பெற்று வருகின்றது என்கின்ற செய்தியினை இம்மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

அந்த வகையில், வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரும், நகர்ப்புறத்தில் வாழ்வோரும், விவசாயத்தில் பங்கு பெறுவதற்கும், பாதுகாப்பதற்கும், ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம், தோட்டப் பயிர் மேலாண்மை, நீர் மேலாண்மை மற்றும் பயன்பாடு, மாடித் தோட்டம், மலர்த் தோட்டம், சிறு, சிறு பயிர் மற்றும் பழத்தோட்டங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கும், தொழில்நுட்பங்களை அறிந்துகொள்வதற்கும், பயன்பெறுவதற்கும், அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழு மகளிர் என இவர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தி, அவர்களைப் பங்குபெற வைத்து, அங்கே அவர்களுக்குத் தேவையான வங்கிக் கடன், விதைகள், விவசாய இடுபொருட்கள், உபகரணங்கள், மரக் கன்றுகள் ஆகியவற்றை

2019 ஜூலை 2]

விலையில்லாமல் வழங்குவதுடன் அம்முயற்சியில் வெற்றி காணும் மாணவர்களுக்கும், மகளிருக்கும் சான்றிதழ்கள் வழங்கி, ஊக்கப்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு ஆவன செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விவசாயிகளுடைய நலன் கருதி என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ, அவையனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளின்படி, கிச்சிப்பாளையம், மணியனூர் ஆகிய இரண்டு இடங்களில், ஏதாவது ஓரிடத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

அடிப்படை வசதிகள்

***11929—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலையில் கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?